# மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் துவக்க உரை

நேஷனல் இ–விதான் அப்ளிகேஷன், அதாவது காகிதமில்லா சட்டமன்றம் திட்டத்தினை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக அளிக்கப்படவிருக்கும் இரண்டு நாள் பயிற்சி வகுப்பின் துவக்க விழாவிற்கு வருகை புரிந்துள்ள மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்களே,

தமிழ்நாடு மின் ஆளுமை நிறுவன ஆணையர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் திரு. சந்தோஷ் கே. மிஷ்ரா, இ.ஆ.ப. அவர்களே,

எல்காட் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. எம். விஜயகுமார், இ.ஆ.ப. அவர்களே,

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. கே. சீனிவாசன் அவர்களே,

பாராளுமன்ற விவகாரத் துறை அமைச்சகத்திலிருந்து பயிற்சி அளிக்க வந்துள்ள நேவா ஒருங்கிணைப்பாளர் திரு. ஆர்பிட் தியாகி மற்றும் திரு. சமீர் வர்ஷ்னி அவர்களே,

NIC அலுவலர்களே,

பேரவைச் செயலக அலுவலர்களே,

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காகிதமில்லா சட்டமன்றம் என்ற திட்டத்திற்கான பயிற்சியின் துவக்க விழாவில் கலந்து கொண்டு உங்களிடையே உரையாற்றுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் தருணத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்தை கணினிமயமாக்கிய பெருமைக்குரியவர் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில், மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஆட்சியில் காகிதமில்லா சட்டமன்றம் என்கிற திட்டத்தை செயல்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது முனைப்புடன் நடைபெற்றுக் கொண்டிருப்பது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி அளிக்கிறது.

காகிதமில்லாச் சட்டமன்றம் என்னும் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் காகிதப் பயன்பாடு வெகுவாக

குறைக்கப்படும். இதேபோன்று, அஞ்சலகச் செலவு உள்ளிட்ட இதர செலவுகளும் குறைக்கப்படும். இதன்மூலம் பெரிய அளவில் சேமிப்பு ஏற்படுவதோடு வேகமாகத் தொடர்புகொள்ளுதல் மற்றும் முடிவுகள் எடுத்தலுக்கும் வழிவகுக்கும்.

எனவே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில், பேரவைக் கூட்டம் நடைபெறும் நாட்களில், பேரவை நிகழ்ச்சி நிரல், வினாப் பட்டியல், மானியக் கோரிக்கைகளின் கொள்கை விளக்கக் குறிப்புகள், குழுக் கூட்டங்கள் குறித்த குறிப்புகள் ஆகியவை மின்னஞ்சல் மூலம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முன்னதாகவே அனுப்பி வைக்கப்பெறுகின்றன என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபோன்று, பேரவைமுன் வைக்கப்பெறும் ஏடுகள் மற்றும் ஆவணங்களும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு PDF வடிவில் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், 14 மற்றும் 15–வது சட்டப் பேரவைகளின் 155 நாட்களுக்கான அதிகாரபூர்வ அச்சிட்ட நடவடிக்கைக் குறிப்புகள் மற்றும் 14–வது பேரவையின் மாண்புமிகு பேரவைத் தலைவரின் தீர்ப்புரைகள்–குறிப்புரைகள் அடங்கிய தொகுப்பு PDF வடிவில் பேரவை

இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 15–வது பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய "யார்–எவர்" – "Who is Who" பேரவை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இச்செயலகத்தின் செயல்பாட்டில் உள்ள கணினி மற்றும் பிரிண்டர் என அனைத்தும் லோக்கல் ஏரியா நெட்வொர்க் மூலம் இணைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 'நேவா' திட்டத்தைச் செயல்படுத்துவதைப் பொறுத்தவரையில், மத்திய பாராளுமன்ற விவகாரத் துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்பேரில், 'நேவா' இணையதளத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் விவரம், பேரவை விவரம், அமைச்சர்கள் விவரம், கூட்டத் தொடர் தொடர்பான Master Data விவரங்கள் மற்றும் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் ஆகியவை பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

'நேவா' திட்டத்தைச் செயல்படுத்துவதில், NIC அலுவலர்களின் பங்களிப்பு மிகவும் பாராட்டுக்குரியது. 'நேவா' குறித்த விரிவான திட்ட அறிக்கையை அவர்கள் குறித்த காலத்திற்குள் தயாரித்து அளித்துள்ளார்கள்.

இதன் தொடர்ச்சியாக, மாநில அளவிலான நேவா செயல்படுத்தும் குழு. மாநில திட்ட மேலாண்மைப் பிரிவு மற்றும் பேரவைத் தலைவர் தலைமையிலான அவைக் குழு ஆகியவற்றை அமைத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக இச்செயலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 'நேவா' குறித்த பயிற்சி இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சியினை அளிக்க வந்துள்ள மத்திய பாராளுமன்ற விவகாரத் துறை அமைச்சக அலுவலர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைச் செயலகப் பணியாளர்களுக்கு இந்த 'நேவா' குறித்த இரண்டு நாள் பயிற்சிக் கருத்தரங்கம் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ளும் பேரவைச் செயலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், இப்பயிற்சியினை நல்லமுறையில் பெற்று, அதன்மூலம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம் காகிதமில்லா சட்டமன்றம் என்ற

நிலையை விரைவில் அடைந்திட, முழு ஒத்துழைப்புடன் பணிபுரிந்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த இரண்டு நாள் பயிற்சிக் கருத்தரங்கினை துவக்கி வைக்கின்றேன்.

நன்றி, வணக்கம்.